**செய்தி வெளியீடு எண்: 283** **நாள்: 26.04.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (26.4.2018) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற மக்கள் நல்வாழ்வுத் துறையில் பணி நியமன ஆணைகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை**

------

**மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி...**

மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள் மற்றும் நுண்கதிர் வீச்சாளர்கள் என 1008 மருத்துவத் துறை பணிகளுக்கான ஆணைகள் வழங்கும் இந்த நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகை தந்து சிறப்பான கருத்துக்களை வழங்கிய
மாண்புமிகு துணை முதலமைச்சர், மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய
திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை உரையாற்றிய
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
மரியாதைக்குரிய சகோதரர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!

வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே,
வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி அவர்களே,
வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற வாரிய தலைவர் அவர்களே,
முன்னாள் அமைச்சர்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களே!

மக்கள் நல்வாழ்வுத் துறையின்
பல்வேறு துறைத் தலைவர்களே மற்றும் அலுவலர்களே!

பணி நியமன ஆணையை பெறுவதற்காக
இங்கு கூடியிருக்கின்ற மருத்துவர்களே! செவிலியர்களே! மருந்தாளுநர்களே
மற்றும் நுண்கதிர் வீச்சாளர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று இருக்கின்ற
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே மற்றும்
இங்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை
தெரிவித்துக் கொள்கிறேன்.

**‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’**
என்றார்கள் நம் முன்னோர்கள்.

‘**சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்**’ என்றும் பெரியவர்கள் கூறுவார்கள்.

எனவே, நோயில்லாத வாழ்வைப் பெறுபவனே
மிகப்பெரிய செல்வந்தன் என்பதில் சந்தேகமில்லை.

மனித குலத்தில் இறைவனுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கக்கூடியவர்கள்
மருத்துவர்கள்.

இன்றைக்கு தமிழ்நாடு மருத்துவத்தில்
மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும், முன்மாதிரியாகவும் விளங்குகிறது
என்றால் அதற்கு காரணம் **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா**
**அவர்கள் தீட்டிய முன்னோடித் திட்டங்கள்** தான் என்பதை உலகு அறியும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் “**தொலைநோக்கு**
**திட்டம் 2023**”–ல் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக சுகாதார குறியீடுகளை
தமிழ்நாடு அடையும் வண்ணம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அவைகளை
நிறைவேற்றிட மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களை
சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

உயர்தர சுகாதார சேவைகளை வழங்குவது மட்டுமல்லாமல், மிகச் சிறந்த
மனிதவளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்துவதிலும், இந்தியாவிலேயே தமிழ்நாடு
ஒரு முன்மாதிரி மாநிலமாக சிறந்து விளங்கி வருகிறது.

தமிழ்நாடு, தாய் சேய் நலம் மற்றும்
குடும்ப நல சேவைத் திட்டங்களை
செயல்படுத்துவதில் முன்மாதிரி மாநிலமாக திகழ்வதோடு, நோய்களைத்
தடுப்பதற்காக பல முன்னோடித் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

அரசு மருத்துவ நிலையங்களுக்கு வரும் ஏழை எளிய மக்களுக்கு தங்கு தடையின்றி
உயர்தர மருத்துவ சேவை கிடைக்க வேண்டும் என்பதற்காக,
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு,

புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவித்தல், அரசு மருத்துவமனைகளின்
கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்,
லீனியர் ஆக்ஸிலேட்டர்,
எம்.ஆர்.ஐ. ஸ்கேன்,
கேத் ஆய்வகங்கள்,
சி.டி. ஸ்கேன் போன்ற நவீன
மருத்துவக் கருவிகளை வழங்குதல்,
போன்ற அம்மாவுடைய அரசு இன்றைக்கு செயல்படுத்தியிருக்கின்றது.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி
மகப்பேறு நிதியுதவி திட்டம்,
முதலமைச்சரின் விரிவான
மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்,
அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்,
அம்மா மகப்பேறு சஞ்சீவினி திட்டம்,
அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம் மற்றும்
மகளிருக்காக அம்மா மகளிர்
சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டம்,

விலையில்லா சானிடரி நாப்கின் வழங்கும் திட்டம்,
நடமாடும் மருத்துவமனை திட்டம்,
தொற்றாநோய் தடுப்பு, கட்டுப்படுத்தல் மற்றும்
சிகிச்சை அளிக்கும் திட்டம்,

தாய்ப்பால் வங்கி திட்டம்,
உயர்நிலை மருத்துவமனைகளில்
கட்டமைப்பு வசதி விரிவுபடுத்தல்,

தமிழ்நாடு அரசு பன்னோக்கு
உயர் சிறப்பு மருத்துவமனை,
விபத்து சேவை மையங்களுடன் கூடிய
உயர் சிறப்பு மருத்துவமனைகள் நிறுவுதல்,

"108" அவசரகால ஊர்தி சேவை போன்ற
பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மாண்புமிகு
புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு, தொடர்ந்து
சிறப்பான முறையிலே அம்மாவுடைய அரசு செயல்படுத்தி வருகின்றது என்பதை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு மருத்துவமனைகளில் உள்ள பணியிடங்களை
உடனுக்குடன் நிரப்பி, அரசு மருத்துவ நிலையங்களுக்கு
வரும் ஏழை எளிய மக்களுக்கு தங்குதடையின்றி
மருத்துவ சேவை வழங்கப்பட வேண்டுமென்ற
உயரிய நோக்கத்தில், வேறு எந்த மாநிலத்திலும்
இல்லாத வகையில் தமிழ்நாட்டில் மட்டும் தான் இந்தியாவிலேயே முதன்முறையாக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கென தனியாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் 2012–ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இந்த வாரியம், இதுவரை மருத்துவர்கள் மற்றும் சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் உட்பட 23,880 பணியாளர்களை தேர்வு செய்துள்ளது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று 242 உதவி மருத்துவர்கள்,
337 செவிலியர்கள், 308 மருந்தாளுநர்கள்
மற்றும் 90 நுண்கதிர் வீச்சாளர்கள் மற்றும்
21 வட்டார சுகாதார புள்ளியியல் அலுவலர்கள், மற்றும் கருணை அடிப்படையில் 10 இளநிலை உதவியாளர்கள் என மொத்தம் 1008 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட உள்ளது.

இவர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கிடும் மகிழ்ச்சியான
நிகழ்ச்சிதான் இந்த அரங்கில் தற்போது நடைபெற்று வருகிறது
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற அடிப்படையில், இன்றைக்கு பணி ஆணை பெற்றுள்ள உதவி மருத்துவர்கள், மருந்தாளுநர்கள், செவிலியர்கள்
மற்றும் நுண்கதிர் வீச்சாளர்கள் தங்களுடைய கடமைகளை உணர்ந்து, அர்ப்பணிப்பு உணர்வுடன் தமிழ்நாட்டு மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு போதிய மருத்துவ சேவைகளை வழங்குமாறும், தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு சுகாதார திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கவும், மக்கள் நலம் மேம்படவும்,
மக்கள் மகிழ்ச்சியுறும் வகையில் தங்கள் பணிகளை செவ்வனே செய்ய வேண்டும் என உங்களை எல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருக்குறளில் ‘மருந்து’ என்ற அதிகாரம் இருக்கிறது. மருத்துவத் துறைக்கு வருகிறவர்கள்
அவசியம் அந்த அதிகாரத்திலுள்ள
பத்து குறள்களையும் படித்து,
அதன்படி நடப்பதுடன் அந்த கருத்துக்களை

பின்பற்ற வேண்டும்.

ஆங்கில மருத்துவத்தில் சிறந்த வல்லுநர்களாக இருந்தாலும்கூட அந்த மருத்துவங்களில்
நமது தமிழ் மருத்துவத்தின் அடிநாதம் இருப்பதையும்
உணரவேண்டும்.

சமீப காலத்தில் தமிழ்நாட்டு மக்களை அச்சுறுத்திய
பல நோய்களிலிருந்து மக்களை மீட்டெடுத்ததற்கு
அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும்,
துரித சிகிச்சைகளும், இரவு பகல் பார்க்காமல் மருத்துவர்களும், மருத்துவப் பணியாளர்களும் தியாக உள்ளத்தோடு ஆற்றிய பணியும் தான் காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

**புதியதாக அரசுப்பணியில் சேர இருக்கின்ற
உங்களுக்கு ஒரு சிறிய கதை கூற விரும்புகிறேன்.**

காட்டில் வயதான சிங்கம் ஒன்று வசித்து வந்தது.
அந்தச் சிங்கம், தனக்கு வயதாகி விட்ட காரணத்தினால்,
தனது குட்டி சிங்கங்கள் கொண்டு வந்து கொடுக்கும்
உணவை நேரத்திற்குச் சாப்பிட்டு
ஓய்வு எடுத்து வருவதைத் தவிர
உழைக்க முன்வரவில்லை. மேலும்,
உழைப்பு இல்லாத காரணத்தினால்,
அதற்கு தூக்கமும் வரவில்லை.

இந்நிலையில், ஒரு நாள் காட்டில் உள்ள
சில விலங்குகளைக் கூப்பிட்டு, தனக்கு சரியாக
தூக்கம் வரவில்லை என்றும், அதற்கு சரியான
மருந்தைச் சொல்ல வேண்டும் என்றும்
மற்ற விலங்குகளிடம் கேட்டுக் கொண்டது.
அதைக் கேட்ட அந்த காட்டு விலங்குகள்
தமக்குத் தெரிந்தவற்றை கூறின.
ஆனால், எதைச் செய்தும், அந்த சிங்கத்திற்கு
தூக்கம் வரவில்லை. எனவே அனைத்து
விலங்குகள் மீதும் கோபம் கொண்டது.

இதை அறிந்த ஒரு நரி, நேராக அந்த
வயதான சிங்கத்திடம் வந்தது.
வந்த அந்த நரி, சிங்கத்திடம்,

‘‘என்னுடைய தாத்தா ஒருவர் இந்த
மலை மீது இருக்கிறார். அவர் தங்களுக்கு சரியான
மருத்துவம் கூறுவார்’’, என்று சொன்னது.

அதை நம்பிய அந்தச் சிங்கமும், மலை மீது ஏறியது.
அங்கே சென்று பார்த்தால், அந்த தாத்தா நரி
அங்கு இல்லை. உடனே,
‘‘எனது தாத்தா இன்று பக்கத்தில் உள்ள காட்டிற்குச்
சென்றுள்ளது. நாளை தான் வருவார்.
எனவே, நாம் இன்று போய் நாளை வருவோம்’’ என்றது.

இதைக் கேட்ட அந்த வயதான சிங்கம்
மலையிலிருந்து இறங்கி, கீழே வந்தது.
மலை மேலே ஏறி, இறங்கிய வயதான சிங்கத்திற்கு
நன்றாக தூக்கம் வந்தது. மறு நாள் அந்த நரி வந்து,
‘‘நேற்று நல்ல தூக்கம் வந்ததா **?**’’ எனக் கேட்டது.

உடனே ஆச்சரியத்துடன் அந்தச் சிங்கம்
‘‘எனக்கு நன்றாக தூக்கம் வந்தது உனக்கு
எப்படித் தெரியும்,’’ எனக் கேட்டது. அதற்கு, அந்த நரி,
‘‘உழைத்தால் ஓய்வு தேவைப்படும்,
தூக்கம் தானாக வரும்’’, எனச் சொன்னது.

உங்களிடம் வரும் நோயாளிகளுக்கு
சிகிச்சை அளிக்கும் முன்,
அவர்களின் நோய்க்கான காரணத்தை
அறிந்து அவர்களுக்கு என்ன தேவை
என்பதை கண்டறிந்து, மருத்துவம் பார்த்து,
நோய்களை வெற்றிகரமாக குணப்படுத்துவதன் மூலம்
நீங்கள் தான் சிறந்த மருத்துவர் என்ற
நற்பெயரை நீங்கள் பெறுவீர்கள். அதுதான்
நீங்கள் இந்த அரசுக்குக் காட்டும் நன்றியாக
நான் கருதுகிறேன்.

மருத்துவத்துறையை பொருத்தவரை நீங்கள்
படிக்கின்ற காலத்தில் பெற்ற மதிப்பெண்கள்
பேசப்படுவது அல்ல. மருத்துவரான பிறகு
மக்கள் உங்கள் மீது காட்டுகின்ற

மரியாதைதான் பேசப்பட வேண்டும்.
மக்கள் உங்களை மனதார வாழ்த்த வேண்டும்.

இந்த மாதிரியான பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் தான், உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் ஆரோக்கியமாக, மகிழ்ச்சியாக, மனநிறைவுடன் நீண்ட நெடுங்காலம் வாழவைக்கும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் நன்றாக குறிப்பிட்டார்கள். இன்றைக்கு தமிழ்நாடு, மருத்துவத் துறையிலே ஒரு சிறந்த மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், மருத்துவர்களுடைய அர்ப்பணிப்புதான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இன்றைக்கு, அரசு மருத்துவமனை தனியார் மருத்துவமனைக்கு இணையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, அதற்கு பல்வேறு உதாரணங்கள் இருக்கின்றன. இன்றைக்கு, உடல் உறுப்பு அறுவை சிகிச்சை, கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழ்நாடு, தேசிய அளவில் முதலிடம் வகிக்கிறது என்று சொன்னால், மருத்துவர்களுடைய திறமை தான் இதற்குக் காரணம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அது மட்டுமல்ல, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் பகுதியைச் சேர்ந்த நாராயணசாமி, வயது 29, ஒரு ஏழை தொழிலாளி, அவர் இரண்டு கைகளையும் இழந்தவர். அவர் இரண்டு கைகளையும் பொருத்தவேண்டும் என்று அரசிடத்திலே கோரிக்கை வைத்தார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் என்னிடம் கலந்து பேசினார்கள். இரண்டு கைகளையும் அவருக்கு பொருத்துவதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்று என்னிடம் கேட்டார். இது சாத்தியமா என்று கேட்டேன். நிச்சயமாக சாத்தியம் ஆக்க முடியும். நம்முடைய மருத்துவர்கள் சிறந்த மருத்துவர்கள், வல்லுநர்கள், நிச்சயமாக இதை நிறைவேற்றுவார்கள் என்று என்னிடத்திலே உறுதியளித்தார். இதன் பொருட்டு இன்றைக்கு இரண்டு கைகளையும் இழந்த அவருக்கு, இறந்த ஒருவரின் உடலிலிருந்து இரண்டு கைகளையும் எடுத்து பொருத்தி இன்றைக்கு இரண்டு மாதம் ஆகிறது. இன்றைக்கு சிறப்பாக இரண்டு கைகளையும் பயன்படுத்தக்கூடிய

நிலையில் அவர் இருக்கின்றார். இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு மருத்துவமனையிலே உடல் உறுப்பு அறுவை சிகிச்சை மூலமாக இரண்டு கைகளையும் பொருத்தி வெற்றி கண்ட மாநிலம் தமிழ்நாடு என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன். ஆகவே, இந்த சாதனையை செய்த அந்த மருத்துவக் குழுவிற்கு உங்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இப்படி தமிழகம் மருத்துவத் துறையில் ஒரு மைல்கல் போல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இங்கே பணி ஆணை பெறுகின்ற அனைவரும் சிறந்த முறையிலே பணியாற்றி மக்களிடத்திலே நற்பெயரைப் பெற்று நம்முடைய அரசிற்கு நற்பெயரை ஈட்டித் தரவேண்டும் என்று கேட்டு, உங்கள் அத்தனை பேரையும், புதிதாக பணி நியமன ஆணைகள் பெறுகின்ற அத்தனை பேரையும் வாழ்த்தி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**